**செய்தி வெளியீடு எண்.881** **நாள்: 08.10.2010**

# ரூபாய் 270 கோடி மதிப்பீட்டில் சேலம் மாவட்டத்தில் கூட்டு குடிநீர் திட்டத்தை செயல்படுத்த துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒப்புதல்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அதிகாரம் அளிக்கப் பெற்ற குழுவின் 24வது கூட்டம் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (08.10.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேட்டூர் அணையின் கீழ்ப்பகுதியில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் மற்றும் நரசிங்காபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1345 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு திட்ட மதிப்பீடு ரூ.270.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 29.09.2010 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அதிகாரம் அளிக்கப்பெற்ற குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. இன்று நடைபெற்ற அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

விரைவில் இத்திட்டத்திற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் திருமதி.எஸ்.மாலதி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.அசோக்வர்தன்ஷெட்டி, நிதித்துறை முதன்மை செயலாளர் திரு.கே.சண்முகம், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.கே.அலாவுதீன், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுர்ஜித் கே. சவுத்திரி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) திரு.ஹித்தேஷ்குமார் எஸ்.மக்வானா மற்றும் குடிநீர் வடிகால் வாரிய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.